மத்தியவைப்புத்திட்டம்(தனியார்)கம்பனி.
# 04-01, மேற்குத் தொகுதி, உலகவர்த்தக மையம்,
எச்லன் சதுக்கம்,
கொழும்பு 01.

**CDS 2(A)**
கம்பனிகள்

பங்குபற்றுனரின் அதிகாரமளிக்கப் பட்ட கையொப்பமும் முத்திரையும்

# உறுதிமொழிப் படிவம்

.................................................................................................................................................. என்ற பெயரின்கீழ்
(கூட்டிணைக்கப்பட்ட அமைப்பின் பெயர்)
கூட்டிணைக்கப்பட்டு/தாபிக்கப்பட்டு.............................................................................................................என்ற பதிவு செய்யப்பட்ட முகவரியில் அதன் அலுவலகத்தையுடைய நாம். மத்திய வைப்புத் திட்டம்(தனியார்) கம்பனியில் எமது பெயரில் பிணைகள் கணக்கு ஆரம்பிக்க உடன்படுவதுடன் முறையாக பின்வருமாறு எம்மால் உறதிப்படுத்தப்படுகின்றன.

1 *மத்திய வைப்புத்திட்டத்தில் எம்மால் ஆரம்பிக்கப்பட்ட பிணைகள் கணக்கினூடாக கொள்வனவு செய்யப்படும் பிணையங்கள். எமது நலன்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டிருக்கும்..

2 *நம்பிக்கைப் பொறுப்பாளர்/ பாதுகாவலர்/ நிதிமுகாமையாளர்/ நம்பிக்கை அலகுப் பொறுப்பு முகாமையாளர்/ வெளிநாட்டுத்தரகர்/ வெளிநாட்டு வர்த்தகர் என்ற அந்தஸ்தில் எம்மால் ஆரம்பிக்கப்பட்ட பிணைகள் கணக்கினூடாக ........................................................................................................ என்பவரின் நலன் கருதி எம்மால் பிணையங்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன.

3 *பிணைகள் கணக்குத் திறக்கும் ஒவ்வொரு இறுதிப் பயனாளிகளின் நலன் கருதி நம்பிக்கைப் பொறுப்பாளர்/பாதுகாவலர்/ நிதிமுகாமையாளர்/ நம்பிக்கை அலகுப் பொறுப்பு முகாமையாளர்/ வெளிநாட்டுத்தரகர்/ வெளிநாட்டு வர்த்தகர் ஆகிய நாம் கணக்கின் இறுதிப் பயனாளிகள் தொடர்பாக அனைத்துத் தகவல்களையும் பேணுகின்றோம். அத்துடன் மத்திய வைப்புத்திட்டதினால் கோரப்படுகின்ற எந்தச் சந்தர்பத்திலும் பயனாளிகள் தொடர்பான அத்தகைய தகவல்ளை முறையாக வெளிப்படுத்த கடமைப்பட்டுள்ளோம்.

4 விண்ணப்பப்படிவமும் அதனுடன் இணைக்கப்படுகின்ற ஆவணங்களும் உண்மையான தகவல்களைக் கொண்டுள்ளன. மேலும் உண்னமயான தகவல்ளை மறைப்பதற்கு அல்லது பிறழ்வழி இட்டுச் செல்லும் வகையில் மாற்றங்கள், திரிபுபடுத்தல்கள் மற்றும் மோசடிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

5 பிணைகள் கணக்கு ஆரம்பிப்பது தொடர்பான விண்ணப்பப்படிவம் 2[ஆம்] கொடுக்கப்பட்ட விபரங்கள் இவ் படிவத்தினூடாக உறுதிப்படுத்தப்படும் விபரங்களுடன் ஏதேனும் ஒருவகையில் வேறுபடும் பட்சத்தில் அத்தகைய வேறுபாடு வெளிக்கொனரப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்குள் எழுத்து மூலமாக மத்திய வைப்புத்திட்டத்திற்குத் தெரியப்படுத்த கடமைப்பட்டுள்ளோம்.

6 மத்திய வைப்புத்திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பிணைகள் கணக்கினூடாக பிணையங்களைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான நிதிமுதல் பணத்துாய்மைப்படுத்தல் நடவடிக்கைகள் மூலமாகப் பெறப்பட்ட நிதியோ அல்லது பயங்கரவாதம் மற்றும் வேறு ஏதேனும் சட்டவிரோதமான நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நிதியோ அல்ல.

7 பின்வரும் தவறுகள் தொடர்பில் இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டிலுள்ள எந்நவொரு குற்றவியல் /குடியியல் நியாயசபை அல்லது நிர்வாக அதிகாரசபையினால் நாம் தடைசெய்யப்படவோ அல்லது நிராகரிக்கப்படவோ அல்லது இடைநிறுத்தப்படவோ இல்லை..

- 2006[ஆம்] ஆண்டு 6[ஆம்] இலக்க நிதிசார் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல் தொடர்பான சட்டத்தினால் வரைவிலக்கணப்படுத்தப்பட்ட ஏதேனும் சட்டவிரோத நடவடிக்கைகளுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்புபட்ட ஆதனம் தொடர்பான கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைளில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபட்டிருத்தல்.
- மேலே குறிப்பிடப்பட்டது போன்று ஏதேனும் சட்டவிரோதமான வருமான மூலங்களுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்புடைய ஆதனங்களைப் பெறுதல், உடைமைப்படுத்தல், மறைத்துவைத்தல், கையுதிர்த்தல் அல்லது இலங்கைக்குள் அல்லது வேறு ஏதேனும் நாட்டிற்குள் கொண்டுவருதல் அல்லது இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் முதலீடுசெய்தல். அல்லது.
- 2006[ஆம்] ஆண்டு 5[ஆம்] இலக்க பணம் துாய்தாக்கல் தடைச் சட்டத்தின் அல்லது அதனுடன் தொடர்புடைய வேறு ஏதேனும் திருத்தச்சட்டத்தின் கீழ் அல்லது உலகின் வேறு ஏதேனும் பாகத்திலுள்ள இதனையொத்த ஏதேனும் சட்டவாக்கத்தின் கீழ் வரைவிலக்கணப்படுத்தப்பட்ட வேறு ஏதேனும் தவறுகள்.

8 இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் மேற்குறிப்பிட்ட தவறுகள் தொடர்பில் குற்றவியல் சட்டத்தின் கீழ் குற்றத்தீர்ப்புக் குறிப்புகள் எதுவுமற்ற நன்மதிப்புடைய நபர்/நபர்கள் ஆவோம் என இத்தால் மேலும் உறுதிப்படுத்துகின்றோம்..

9 நாம் அல்லது எம்முடன் இணைந்துள்ள எவரேனும் நபர்/நபர்கள்) அல்லது எம்முடன் தொடர்புடைய ஏதேனும் அமைப்புகள் (பின்வரும் நிலையில் அதாவது பங்காளராக, பங்குதாரராக, பணிப்பாளராக) எமக்கு அல்லது மேலே கூறப்பட்டவாறு இணைந்துள்ள கட்சியினருக்கு எதிராக, பின்வருவன தவிர (ஏதேனும் முடிவுறாதிருக்கும் வழக்குகளின் விரிவான விபரணத்தைத் தரவும்) இலங்கையில் அல்லது உலகின் வேறு ஏதேனும் ஒரு பாகத்தில் எவையேனும் குற்றத்திற்கான குற்றச்சாட்டுக்களையோ அல்லது முடிவுறாதிருக்கும் குற்றவியல் நடவடிக்கைகளையோ கொண்டிருக்கவில்லை.
..................................................................................................................................................
..................................................................................................................................................
..................................................................................................................................................
..................................................................................................................................................

10 மத்திய வைப்புத்திட்டத்தில் பிணைகள் கணக்கு ஆரம்பிப்பதற்கான விண்ணப்பமும் அதனுடன் இணைந்த ஆவணங்களும், எந்தவொரு பங்குபற்றுனராலும் மறுக்கப்படவில்லை எனவும். அல்லது ஏதாவது தொழில் தொடர்பான உறவுகள் பங்குபற்றுனரினால் நிராகரிக்கப்படவில்லை எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.

11 கொழும்பு பங்குப்பரிவர்த்தனை அல்லது மத்திய வைப்பத்திட்ட கம்பனியின் கோட்பாடுகளை மீறும்வகையில் அல்லது இலங்கையின் சட்டவிதிமுறைகள், ஒழுங்குகளுக்கு கட்டுப்பட்டு செயற்படும் மத்திய வைப்புத்திட்ட கம்பனிக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் வகையில் எங்களால் பிறப்பிக்கப்படுகின்ற கூற்றுக்கள் அல்லது இதனுடன் தொடர்புபட்ட கட்சியினர் தொடர்பில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் வகையில் ஏதாவது அறிக்கைகளை எம்மால் பகிரங்கப்படுத்தப்பட்டதாகக் கருதுமிடத்து மத்திய வைப்புத்திட்டம் தன்னிச்சையாக எமது வைப்புக்கள் மற்றும் இதனுடன் தொடர்புபட்ட அனைத்துச் சேவைகளை முடிவுக்குக் கொண்டுவருவதுடன் மேலும் இதனுடன் தொடர்புபட்ட செலவுகளை அல்லது கணக்குத்தொடர்பான வேறு செலவுளையும் அறவிடுவதற்கு மத்திய வைப்புத்திட்ட கம்பனிக்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றது என நாம் ஒத்துக்கொண்டு உறுதிப்படுத்துகின்றோம்.

இவ் உறுதிமொழிப் படிவத்தில் கையொப்பமிடுவதற்கு முன் **"1"** முதல் **"11"** வரையிலான பந்திகள் வாசிக்கப்பட்டு எம்மால் முழுமையாக விளங்கிக்கொள்ளப்பட்டன என இத்தால் நாம் உறுதிப்படுத்துகிறோம்.

..................................................
(அமைப்பு அகவிதியின் பிரகாரம் கம்பனியின் இலச்சினையையும் பணிப்பாளர்/களின் கையொப்பம்/கள் இடவும்)

200...... மாதம்...................ஆம் திகதியாகிய இன்று.

*பொருத்தமற்றதைக் கீறிவிடவும்.